# மோகன கலாசார மையம் சார்பில் கோடைக்கால பயிற்சி முகாம்

புதுச்சேரி, மே 5–

சஞ்சீவி நகர் மோகன கலாசார மையம் சார்பில் நடத்தப்படும் கோடைக்கால பயிற்சி முகாமில், ஏராளமான மாணவ மாணவிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சஞ்சீவி நகரில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மோகன கலாசார மயம் செயல்பட்டு வருகிறது. இங்கு கிராமப்புற மாணவ, மாணவியர்களிடம் புதைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் நடனம், ஓவியம், பரத நாட் டியம், பாட்டு, கைவினை பொருட்கள் தயாரித்தல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப் பட்டு வருகின்றன.

வெளிநாட்டில் இருந்து ஆரோவில் வரும் சுற்றுலாவாசிகளும், இம்மையத்திற்கு வந்து, நம் நாட்டின் கலாசாரங்களை அறிந்து கொள்வது வழக்கம். இம் மையம் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் கோடைக்கால பயிற்சி வகுப்புக்கள் துவங்கி நடந்து வருகிறது.

இந்த முகாமில் ஓவியம், நடனம், பரத நாட்டியம், கைவினைப்பொருட்கள் தயாரித்தல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப் படுகிறது. ஆலங்குப்பம் ஏரிக் கரை அருகே உள்ள ஆரோவில் இடத்தில் இந்த பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது.

குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலா வாசிகளும், இந்த முகாமில் பங்கேற்று ஆர்வமுடன் பயிற்சி பெற்று வருகின்றனர். சஞ்சீவி நகர், ஆலங்குப்பம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

முகாம் ஏற்பாடுகளை மோகன கலாசார மைய நிர்வாகி பாலு, ஒருங்கிணைப்பாளர் ஏழுமலை உள்ளிட்டோர் செய்திருந்தனர்.



■ ஆரோவில் மோகன கலாசார மையம் சார்பில், மாணவிகளுக்கு கைவினை பொருட்கள் செய்வது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

r a Pondy tour,



Scanned with CamScanner